ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T**

**Code No. : 10-T**

**RR+PR**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

**( ಹಳೆ ಪಠ್ಯಕ್ರಮ / Old Syllabus )**

**( ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ + ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Regular Repeater + Private Repeater )**

**பொதுவான குறிப்புகள் :**

i) இந்த வினா-விடைத்தாள் தொகுப்பானது புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 63-ஐ கொண்டுள்ளது.

ii) ஒவ்வொரு புறவயவகை (Objective type) வினாவிற்கான விடையை எழுத இடம் தரப்பட்டுள்ளது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடைக் குறியீட்டு எழுத்துடன் விடையை முழுவதுமாக தரப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும்.

iii) அகவய வினாக்களின் (Subjective type questions) விடைகளை எழுதுவதற்கென போதுமான இடம் தரப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள இடத்திற்குள்ளாகவே நீவிர் விடையளிக்க வேண்டும்.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சி ல் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. (வரைபடங்கள், படங்கள் மற்றும் மேப்புகள் தவிர)

v) மாற்று வினாக்கள் தரப்பட்டுள்ள வினாக்களில் ஏதேனும் ஒரேயொரு வினாவிற்கு மட்டுமே விடையளிக்க.

vi) புறவய மற்றும் அகவய வினாக்களுக்கு எதிராக தரப்பட்டுள்ள குறிப்புகளை கடைபிடிக்கவும்.

vii) பல்விடை வினாக்கள் (Multiple choice questions), கோடிட்ட இடத்தை நிரப்புதல் மற்றும் பொருத்துக வகை வினாக்களின் விடைகளில் சுரண்டுதல் / திரும்ப எழுதுதல் / குறியிடுதல்கள் அனுமதிக்கப்படாது. இவ்வாறு செய்தால் அவை மதிப்பீடு செய்யப்பட மாட்டாது.

viii) மாணாக்கர்கள் வினாத்தாளை படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளது.

ix) வலது பக்க ஓரத்தில் தரப்பட்டுள்ள இடத்தில் எதுவும் எழுத வேண்டாம்.

I. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமைபெறாத கூற்றுகளுக்கு (Incomplete statements) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை அதற்கென தரப்பட்டுள்ள இடத்தில் விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். $15 \times 1 = 15$

1. தமிழரசியின் செங்கோலாய் விளங்குவது ................................. .

(A) சிலப்பதிகாரம் (B) மணிமேகலை

(C) திருக்குறள் (D) சூளாமணி.

2. காயக் கண்டது ................................. .

(A) சந்தனம் (B) சூரியகாந்தி

(C) தயிர் (D) நாழிகை.

3. கருநாடகத்தில் வீரசைவத்திற்கு வித்திட்டவர் ........................ .

(A) இராமானுஜர் (B) காளிதாசர்

(C) காளமேகம் (D) பசவண்ணர்.

4. கண்ணதாசன் எழுதிய நூல் ................................. .

(A) கனிச்சாறு (B) இயேசு காவியம்

(C) தமிழ்விடு தூது (D) கருவாச்சி காவியம்.

5. பெண்ணடிமை தீருமட்டும் தீராதது ............................ .

(A) களஞ்சியம் (B) பஞ்சம்

(C) மண்ணடிமை (D) சாதி.

6. "அரங்கா! நின் பக்கமிருக்க ஒருநாளும்

பறவேன், பறவேன், பறவேனே" என்றவர் ............................ .

(A) சதாசிவ தேசிகர் (B) மதுர கவிராயர்

(C) தியாகராயர் (D) இராம கவிராயர்.

7. ஆபுத்திரனுக்கு உதவிய தெய்வம் ............................... .

(A) சிந்தா தேவி (B) தீவதிலகை

(C) மணிமேகலா (D) முத்தாள்.

8. புறப்பொருள் கூறும் நூல் ............................ .

(A) அகநானூறு (B) புறநானூறு

(C) க த்தொகை (D) குறுந்தொகை.

9. 'தத்தா நமர்' - இதில் 'நமர்' என்று மெய்ப்பொருள் நாயனார் யாரைக் குறிப்பிடுகின்றார் ?

(A) வாயிற்காவலன் (B) தேவியார்

(C) முத்தநாதன் (D) பார்வதி கொழுநன்.

10. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது ................................ .

(A) அரசு (B) இயற்கை

(C) தொழிற்சாலைகள் (D) தொண்டு நிறுவனங்கள்.

11. பேரா. சுந்தரம்பிள்ளை எழுதிய நூல் ................................ .

(A) தமிழ் நிலம் (B) பராபரக் கண்ணி

(C) மனோன்மணீயம் (D) தென்றல் திரை.

12. “சாணேற முழம் சறுக்குகின்றதே! நான் என்ன செய்வேன் ?” என்றவர் ............................ .

(A) பிள்ளையவர்கள் (B) ஓதுவார்

(C) அந்தணர் (D) மாணவர்.

13. திருக்குறளை முதன்முத ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் ............................... .

(A) வீரமாமுனிவர் (B) கால்டுவெல்

(C) வ.வே.சு. ஐயர் (D) ஜி.யு. போப்.

14. வாழ்க, வாழ்க, வாழ்க .......................................... .

(A) வேற்றுமைத் தொடர் (B) அன்மொழித் தொடர்

(C) அடுக்குத் தொடர் (D) ஏவல் வினை.

15. நெட்டெழுத்துக்களின் மாத்திரை ................................... .

(A) இரண்டு (B) ஒன்று

(C) மூன்று (D) அரை.

II. கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. பூர்ச்ச மரங்களை நட்டு வளர்த்தவர் ............................................... .

17. செய்யுளுக்கே உரிய சொல் ............................................... .

18. ‘சின்னப் பிள்ளைக்கு விருது கொடுக்க நாம் யார் ?’ என்றவர் ............................................... .

19. அலகிலா விளையாட்டுடையவர் ............................................. .

20. இளநாகனுக்கு நிலத்தை விற்றவர் ............................................. .

III. 21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| a) | மினி இந்தியா | i) | ஒற்றளபெடை |
| b) | பாவலரேறு | ii) | ஆலமரம் |
| c) | இலங்கு | iii) | எலுமிச்சை |
| d) | திம்மக்கா | iv) | திரு.வி.க. |
| e) | எரிகுணம் | v) | பெருஞ்சித்தரனார் |
| | | vi) | ஹூஸ்டன். |

IV. பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு வாக்கியத்தில் விடை தருக : 10 × 1 = 10

22. அரசனாக வேண்டுமெனில் கவிமணி கூறும் வழி யாது ?

23. யாரிடம் சேரும் செல்வம் இனிது என்கிறார் பூதன்சேந்தனார் ?

24. ஐம்பூதங்கள் யாவை ?

25. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

26. செல்ல மழை ஏன் பெய்ய வேண்டும் ?

27. 'யக்ஷகான கோடங்கி'யின் பணி யாது ?

28. ஆனந்தரங்கப் பிள்ளைக்கு எம்மொழிகளில் பயிற்சி உண்டு ?

29. உலக இன்னல்களுக்கெல்லாம் காரணம் என்ன ?

30. வினையாலணையும் பெயர் என்றால் என்ன ?

31. நாட்டுப்புறக் கலைகள் நசிந்து வரக் காரணம் என்ன ?

V. பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று வாக்கியங்களில் விடை தருக 15 × 2 = 30

32. குனங்குடி மஸ்தான் அவர்கள் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

33. எண்ணிய எண்ணியாங்கு எய்துவது எப்போது ?

34. நாய் பெற்ற தெங்கம் பழம் - இப்பழமொழியை விளக்குக.

35. சோழனின் யானை நாணிப் புறங்கடை நின்றது. ஏன் ?

36. ஔவையார் எதனை நல்ல நிலம் என்று குறிப்பிடுகின்றார் ?

37. ஆனந்தரங்கப் பிள்ளையிடத்து லெனுவார் எவ்வாறு அன்பு காட்டினார் ?

38. அந்தணர் தம் மனைவியிடம் மகிழ்ந்து கூறியது என்ன ?

39. தீய வழியில் பொருளீட்டியவர் எவ்வாறு துன்புறுவர் ?

40. பட்டியில் அடைக்கப்பட்ட கால்நடைகளை திம்மக்கா எவ்வாறு பேணினார் ?

41. விடுதி மேலாளர் சாந்தா பார்பராவில் நிலையாகத் தங்கக் காரணம் யாது ?

42. ஆனந்தரங்கப் பிள்ளை அன்புள்ளம் கொண்டவர் என்பதை விளக்குக.

43. விடியற்காலை நிகழ்ச்சியாக சுந்தரம் பிள்ளையின் கற்பனையை விவரி.

44. அடி என்றால் என்ன ? அதன் வகைகளை எழுதுக.

45. வஞ்சப் புகழ்ச்சியணி என்றால் என்ன ?

46. இளைஞனின் வ மையை கவிஞர் சிற்பி எவ்வாறு உரைக்கின்றார் ?

VI. பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் **ஐந்து** வாக்கியங்களில் விடை தருக : 4 × 3 = 12

47. மழையின் சிறப்புகளை வள்ளுவர் எங்ஙனம் விளக்குகிறார் ?

48. தருமன் சூதில் தொலைத்தவை எவை ?

49. ஆகுபெயர் என்றால் என்ன ? இரண்டினைச் சான்றுடன் விளக்குக.

*அல்லது*

உயிரளபெடை என்றால் என்ன ? வகைகள் யாவை ?

50. பண்புத் தொகையைச் சான்றுடன் விளக்குக.

*அல்லது*

தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

VII. பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்குக : 5 × 3 = 15

51. “எங்களில் ஒருவருக்குக்கூட சொந்தமாக வீடு இல்லை”

52. “இந்தச் சிறுவனால் நம் வழக்கைப் புரிந்து கொள்ளவே முடியாதே”

53. ‘மழை பொழியும் பயிர் விளையும் யானைகளால் தீங்கு நேராது’

54. “இந்தியாவி ருந்து எனக்கு ஏது கொணர்ந்தாய் வைரமுத்து ?”

55. “என்னால் இப்பொழுது ஒன்றும் செய்ய முடியாது”

VIII. கீழ்க்காணும் பழமொழிகளுள் ஒன்றை மட்டும் விளக்குக : 1 × 3 = 3

56. (அ) தவளை தன் வாயால் கெடும்

(ஆ) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

(இ) எறும்பு ஊர கல்லும் தேயும்.

IX. அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. 'காதொளிரும் .............' என வரும் பாடல்.

*அல்லது*

'பெரிய விடமே சேரும் .............' என வரும் பாடல்.

X. பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் **எட்டு** வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. பாரத நாட்டின் பெருமைகளை திரு.வி.க. எவ்வாறு கூறுகிறார் ?

*அல்லது*

அமைதிப் புறாவின் ஆசைகளாக கவிஞர் வைரமுத்து கூறுவன யாவை ?

59. 'பாகவத மேள' கூத்தினை விவரி.

*அல்லது*

சின்னப்பிள்ளையின் சாதனைகளை விவரி.

60. பூங்குன்றன், இளநாகன் இருவரும் தத்தம் கருத்தை நியாயப்படுத்திக் கூறியவற்றை எழுதுக.

*அல்லது*

திருக்குறள் உலகப் பேரறிஞர்களால் புகழப்படும் நூல் என்பதற்குச் சான்று தருக.

XI. 61. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக : 4 × 1 = 4

விடுகதைகள் நாட்டுப்புற வாய்மொழி இலக்கிய வகைகளுள் ஒன்று. செவி வழியாகப் பரவுவதே அதன் பண்பாகும். விடுகதை கேட்போரின் எண்ணத்தைக் கிளரச் செய்து அதன் பொருளை அறிய ஊக்குவிக்கும் சிந்தனைக் கருவியாகும். சிந்தனைக்கு விருந்தாகவும் நகைப்பிற்குக் களமாகவும் விடுகதை இலக்கியம் பயன்படுவதால், அது பாமர மக்களின் விருப்பமான விளையாட்டு என வருணிக்கப் படுவதுண்டு. நகர நாகரிகத்தில் அழிந்து கொண்டிருக்கும் விடுகதை இலக்கியத்தை ஏட்டில் இடம்பெறச் செய்ய வேண்டியது தமிழ் மக்கள் மொழி வளர்ச்சிக்கு ஆற்றும் கடமைகளில் ஒன்றாகும்.

வினாக்கள் :

i) விடுகதைகள் எவ்வகை இலக்கியங்களுள் ஒன்று ?

ii) விடுகதைகள் எவ்வாறு சிந்தனைக் கருவியாக விளங்குகிறது ?

iii) விடுகதைகள் பாமர மக்களின் விளையாட்டு என வருணிக்கப்படக் காரணம் என்ன ?

iv) தமிழ் மக்கள் மொழி வளர்ச்சிக்கு ஆற்றும் கடமைகளுள் ஒன்று யாது ?

XII. 62. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை வரைக. $1 \times 5 = 5$

i) கைபேசி

ii) பொங்கல் விழா

iii) காடுகளைக் காப்போம்.

XIII. 63. நீ வாழும் பகுதியில் பராமரிப்பின்றி இருக்கும் பூங்காவை சீரமைத்துத் தருமாறு பெங்களூர் நகரசபை ஆணையருக்கு மடல் ஒன்று வரைக.

*அல்லது*

விளையாட்டு விழாவில் 'ஆட்ட நாயகன்' விருது பெற்ற உன் நண்பனைப் பாராட்டி மடல் ஒன்று வரைக. $1 \times 5 = 5$